அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 5

| | |
|---|---|
| நேரம்: 120 மணித்துளிகள் | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| நாள்: 04.06.2022 | பக்கங்கள்: 12 |

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. தைத்திங்கள் முதலாம் நாள் கொண்டாடப்படும் விழா

☐ பட்டிப்பொங்கல் ☐ ஆடிப்பிறப்பு ☐ தைப்பொங்கல்

2. திங்கள் என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ கதிரவன் ☐ மதி ☐ உலகம்

3. அம்மாவின் உடன்பிறந்தவர் எனக்கு

☐ மாமா ☐ தாத்தா ☐ பெரியப்பா

4. ஆடற்கலை பற்றிக் கூறும் நூல்

☐ மணிமேகலை ☐ நாலடியார் ☐ சிலப்பதிகாரம்

5. நாய்க்குக் குட்டி போல கிளிக்கு

☐ பிள்ளை ☐ கன்று ☐ குஞ்சு

6. தமிழருடைய மரபு விளையாட்டுகளுள் ஒன்று

☐ காளை அடக்குதல் ☐ பனிச்சறுக்கல் ☐ அஞ்சல் ஓட்டம்

7. மண் + பாண்டம் என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ மண்பாண்டம் ☐ மற்பாண்டம் ☐ மட்பாண்டம்

8. முற்காலத்தில் மாதோட்டம் என அழைக்கப்பட்ட இடம்

☐ மட்டக்களப்பு ☐ மன்னார் ☐ திருகோணமலை

9. விளையாடினான் என்ற சொல் குறிக்கும் காலம்

☐ இறந்தகாலம் ☐ நிகழ்காலம் ☐ எதிர்காலம்

10. தோள்கொடுத்தல் என்பது

☐ ஊக்கமளித்தல் ☐ உதவுதல் ☐ ஆர்வமாகக்கேட்டல்

11. நான் படிக்கிறேன். அவர்கள்

☐ படிக்கின்றீர்கள் ☐ படிக்கின்றான் ☐ படிக்கிறார்கள்

12. மகாகவி பாரதியாரின் இளமைப் பெயர்

☐ சின்னத்தம்பி ☐ சுப்பிரமணியன் ☐ கனகசுப்புரத்தினம்

13. பலாப்பழம் என்பதைப் பிரித்து எழுதினால்

☐ பலா + பழம் ☐ பல + பழம் ☐ பலாப் + பழம்

14. பிறப்பு என்பதன் எதிர்ப்பொருட் சொல்

☐ சிரிப்பு ☐ இறப்பு ☐ வாழ்வு

15. நடிகன் என்பதன் எதிர்ப்பாற்சொல்

☐ நடிகை ☐ தலைவி ☐ மாணவி

(15 x 1 = 15 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலையைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. மாறன் தேர்வைச் சிறப்பாக எழுதினான்.
2. பாரதியார் எளிமையான கவிதைகளை இயற்றினார்.
3. நான் அழகான பறவைகளைப் பார்த்தேன்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9 x 1 = 9 புள்ளிகள்)

**3. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| நிறைந்தது | வேண்டும் | இனிமையானது | பறந்தது | கடமை |

1. மரங்களை அழிக்காமல் காப்பது எமது ______________________.

2. பறவை வானத்தில் உயர உயரப் ______________________.

3. எமது நாடு நீர்வளமும் நிலவளமும் ______________________.

4. நண்பனுக்குத் துன்பம் ஏற்படும்போது விரைந்து உதவ ______________________.

5. தமிழ்மொழி தேன் போல ______________________.

(5 x 1 = 5 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. Game | 1. Spiel | 1. Spill |
| 2. Family | 2. Familie | 2. Familie |
| 3. Animals | 3. Tiere | 3. Dyr |
| 4. Banana | 4. Banane | 4. Banan |
| 5. Flag | 5. Flagge | 5. Flagg |
| 6. Chair | 6. Stuhl | 6. Stol |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
| --- | --- | --- |
| 1. Gioco | 1. spel | 1. Spil |
| 2. Famiglia | 2. Familie | 2. Familie |
| 3. Animali | 3. Dieren | 3. Dyr |
| 4. Banana | 4. Banaan | 4. Banan |
| 5. Bandiera | 5. Vlag | 5. Flag |
| 6. Sedia | 6. Stoel | 6. Stol |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
| --- | --- | --- |
| 1. Spel | 1. Urheilu | 1. ______________ |
| 2. Familj | 2. Perhe | 2. ______________ |
| 3. Djur | 3. Eläimet | 3. ______________ |
| 4. Banan | 4. Banaani | 4. ______________ |
| 5. Gren | 5. Lippu | 5. ______________ |
| 6. Säte | 6. Istumapaikka | 6. ______________ |

(6 X 1 = 6 புள்ளிகள்)

**5. அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. ஒலிம்பிக் ______________________ ஐந்து வளையங்கள் உள்ளன. (கொடி)
2. வீரனின் ______________________ மக்கள் போற்றினர். (மாவீரம்)
3. அம்மம்மா காய்கறிகளைக் ______________________ வெட்டினார். (கத்தி)
4. அருவி ______________________ வீழ்கிறது. (மலை)
5. சிறுமி ______________________ நீர் ஊற்றினாள். (செடி)

(5 x 1 = 5 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மன்னாரில் கிடைக்கும் காடுபடு செல்வங்கள் இரண்டினை எழுதுக.

______________________________________________

2. தமிழரது ஓவியக் கலைக்குச் சான்றாக விளங்கும் இடம் எது?

______________________________________________

3. சிறுகூலங்களின் வகைகள் இரண்டினை எழுதுக.

______________________________________________

4. எழிலி நாடகம் நடித்தாள். இச்சொல்லியத்தை எதிர்மறைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

______________________________________________

5. அஃறிணைக்குரிய பால்கள் எவை?

______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

7. **பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இளங்கோ அடிகள் 2. ஒலிம்பிக் விளையாட்டுகள் 3. எனது வீடு

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழ்நாட்டில் பாரி என்ற ஒரு மன்னன் இருந்தார். அவர் பறம்பு மலையை ஆட்சிசெய்தார். அவருக்கு அங்கவை, சங்கவை என்ற இரு மகள்மார் இருந்தனர். அவர் உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர். அதுமட்டுமன்றி, செடிகொடிகள் மீதும் பேரன்பு கொண்டிருந்தார். அவரை எல்லோரும் வள்ளல் பாரி என்று அழைப்பர். அவர் முல்லைக்கொடி படருவதற்குத் தன் தேரைக் கொடுத்தார். பாரி மன்னன் தமிழின் மீது மிகுந்த பற்றுடையவராக இருந்தார். அவர் புலவர்களைப் போற்றும் பண்பு உடையவர். பாரியின் சிறப்பை அறிந்த ஔவையார் அவரைக் காண்பதற்கு அரண்மனைக்குச் சென்றார். பாரியும் ஔவையாரை அன்புடன் வரவேற்று விருந்தளித்து, பரிசில்கள் வழங்கி அவரைப் பாராட்டினார்.

1. பறம்பு மலையை ஆட்சி செய்த மன்னன் யார்?

   ________________________________________

2. பாரியை எல்லோரும் எவ்வாறு அழைப்பர்?

   ________________________________________

3. பாரியைக் காண்பதற்கு அரண்மனைக்குச் சென்ற புலவர் யார்?

   ________________________________________

4. பாரியின் மகள்மார் யாவர்?

   ________________________________________

5. பாரி எதற்குத் தன் தேரைக் கொடுத்தார்?

   ________________________________________


(5 x 2 = 10 புள்ளிகள்)

2. **தரப்பட்டுள்ள குறிப்புகளை வாசித்து, சொல்லியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**



**லூவர் அருங்காட்சியகம்**

டாவின்சியின் மோனாலிசா ஓவியம் உள்ளது.



**ஈபிள்கோபுரம்**

உலகவியப்புகளுள் ஒன்று.

**பிரான்சு**
தலைநகரம்
பாரிசு



**நொற்றடாம் கிருத்தவத் தேவாலயம்**

வரலாற்றுப் புகழ்மிக்க பழைமை வாய்ந்தது.



**நெப்போலியன் வெற்றிவளைவு**

12வீதிகள் ஒன்றாகச் சந்திக்கின்றன.

1. பிரான்சின் தலைநகரம் பாரிசு. (   )
2. நெப்போலியன் வெற்றிவளைவு இங்கிலாந்தில் அமைந்துள்ளது. (   )
3. நொற்றடாம் பழைமை வாய்ந்த கிருத்தவத் தேவாலயம். (   )
4. ஈபிள் கோபுரம் உலக வியப்புகளுள் ஒன்றாக விளங்கவில்லை. (   )
5. மோனாலிசா ஓவியம் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ளது. (   )

(5 x 1 = 5 புள்ளிகள்)